# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 15.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 8848/SCIC/2024**

திரு.இரா.இரவிச்சந்திரன் - மேல்முறையீட்டாளர்
எண்.11/22, சக்தி ஸ்ரீ நகர்
கீழ்மருவத்தூர்
செய்யூர் வட்டம் - 603 319
செங்கல்பட்டு மாவட்டம்.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
செய்யூர் வட்டம் - 604 407
செங்கல்பட்டு மாவட்டம்.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **11.03.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 25.04.2024 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 25.05.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 03.07.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 11/03/2024 நாளிட்ட மனுவை தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், செய்யூர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி, அதில் “செய்யூர் வட்டம் இரும்புலி கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பு வகிக்க ஜனவரி 2024-ல் திரு.பெரியசாமி என்பவருக்கு உத்தரவிடப்பட்ட பணி நியமன உத்திரவு நகல் மற்றும் இரும்புலி கிராமத்தில் பணியில் சேர்ந்த தேதி ஆகியவற்றை தகவலாக வழங்கவும்” என்பன போன்று 13 (பதின்மூன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (15/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.இரா.இரவிச்சந்திரன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.வே.தென்னரசு, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செய்யூர் வட்டாட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு ஏற்கனவே 25/05/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், தனக்கு அனுப்பிய தகவலில் இனம் 1 மற்றும் 2-க்கு தவறான தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளதாகவும், மற்ற இனங்களுக்கான தகவல்கள் சரியானதாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்தார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செய்யூர் வட்டாட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் மனுதாரர் தெரிவித்தவாறு இனங்கள் 1 மற்றும் 2-க்கு ஆவணங்களின்படியான, சரியான, திருத்திய தகவல்களை 31/07/2026-க்குள் மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, பின்னர் அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கையினை ஆணையத்தில் 07/08/2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 8848/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
செய்யூர் வட்டம் - 604 407
செங்கல்பட்டு மாவட்டம்.
கைப்பேசி.9444507290

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு.இரா.இரவிச்சந்திரன்
எண்.11/22, சக்தி ஸ்ரீ நகர்
கீழ்மருவத்தூர்
செய்யூர் வட்டம் - 603 319
செங்கல்பட்டு மாவட்டம்.

RG/Sr.PC